ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2475/26 - 2026 පෙබරවාරි මස 11 වැනි බදාදා - 2026.02.11

2475/26 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: BD/LG/LND/2/අත්පත් කරගැනීම 344 - 380.
காணி அமைச்சின் இல.: 4-3/7/2010/HW/225.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:

ஊவா மாகாணம், பதுளை மாவட்டம், லுணுகலை பிரதேச செயலாளர் பிரிவில், 94G சுமுதுகம கிராம அலுவலர் பிரிவில், மாபா எல்ல கிராமத்தில் இ.கி.வ. 535 இல், பிற்சேர்க்கை இல. 7 இல், தாள் இல.7 இல் துண்டு இல. 289, 292, 293 மற்றும் 294 ஆகியவற்றின் எல்லைகள் விபரங்கள் பின்வருமாறு:

1. துண்டு இல. 289; காணியின் பெயர்: சோலன்ட்ஸ் தோட்டம்; விபரம்: தோட்டம் (5-10 வயதுடைய கலப்பினத் தாவரங்கள் காணப்படுகின்றன); உரிமை கோருவோர்: அரசு, சட்டபூர்வமான விதிகள் மற்றும் அளவைக்கான காரணம் - பதுளை செங்கலடி பாதை அபிவிருத்தி செய்வதற்காக தேவைப்படுகின்றது; விஸ்தீரணம்: 0.0138 ஹெக்டயார்

வடக்கு: துண்டு இல. 250, 277 மற்றும் 290; கிழக்கு: துண்டு இல. 290; தெற்கு: துண்டு இல. 24, 285 மற்றும் 287; மேற்கு: துண்டு இல. 285, 287 மற்றும் 250.

2. துண்டு இல. 292; காணியின் பெயர்: குறிப்பிடப்படவில்லை; விபரம்: தோட்டம் (5-10 வயதிற்குட்பட்ட கலப்பினத் தாவரங்கள் காணப்படுகின்றன); உரிமை கோருவோர்: அரசு, சட்டபூர்வமான விதிகள் மற்றும் அளவைக்கான காரணம் - பதுளை செங்கலடி பாதை அபிவிருத்தி செய்வதற்காக தேவைப்படுகின்றது; விஸ்தீரணம்: 0.0005 ஹெக்டயார்

வடக்கு: துண்டு இல. 291, 72 மற்றும் 293; கிழக்கு: துண்டு இல. 293; தெற்கு: துண்டு இல. 293 மற்றும் 290; மேற்கு: துண்டு இல. 290 மற்றும் 291.


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**3. துண்டு இல. 293; காணியின் பெயர்: பொல் லெத்தேவெல தோட்டம்; விபரம்: தோட்டம் (5-10 வயதிற்குட்பட்ட கலப்பினத் தாவரங்கள் காணப்படு கின்றன); உரிமை கோருவோர்: அரசு, சட்டபூர்வமான விதிகள் மற்றும் அளவைக்கான காரணம் - காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆவது அத்தியாயத்தின் (அ) இடைக்கால உத்தரவின் கீழ் கைப்பற்றப்பட்டது; ஆரம்ப உரிமை கோருவோர்: செனவிதிஸ்ஸபுர, லுணுகலையில் வசிக்கும் விமலரத்ன லியனவிக்ரம சிங்க, பதுளை செங்கலடி பாதை அபிவிருத்தி செய்வதற்காக தேவைப்படுகின்றது; விஸ்தீரணம்: 0.0031 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு இல. 72; கிழக்கு: துண்டு இல. 72 மற்றும் 294; தெற்கு: துண்டு இல. 294, 290 மற்றும் 292; மேற்கு: துண்டு இல. 290, 292, 291 மற்றும் 72.

**4. துண்டு இல. 294; காணியின் பெயர்: பொல் லெத்தேவெல தோட்டம்; விபரம்: தோட்டம் (5-10 வயதிற்குட்பட்ட கலப்பினத் தாவரங்கள் காணப்படு கின்றன); உரிமை கோருவோர்: அரசு, சட்டபூர்வமான விதிகள் மற்றும் அளவைக்கான காரணம் - காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆவது அத்தியாயத்தின் (அ) இடைக்கால உத்தரவின் கீழ் கைப்பற்றப்பட்டது; ஆரம்ப உரிமை கோருவோர்: செனவிதிஸ்ஸபுர விகாரை, பதுளை செங்கலடி பாதை அபிவிருத்தி செய்வதற்காக தேவைப்படுகின்றது; விஸ்தீரணம்: 0.0031 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு இல. 293 மற்றும் 72; கிழக்கு: துண்டு இல. 72 மற்றும் இ. கி. வ. 536 (கொட்டல் பெத்த மெதகங்கொட); தெற்கு: இ. கி. வ. 536 (கொட்டல்பெத்த மெதகங்கொட) மற்றும் துண்டு இல. 290; மேற்கு: துண்டு இல. 290 மற்றும் 293.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 30 ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு லுணுகலை பிரதேச செயலகத் தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணி யில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப் பட்ட விதத்தையும் 2026 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 03 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சி. புவனேந்திரன்,
பிரதேச செயலாளர்,
லுணுகலை.

பிரதேச செயலகம்,
லுணுகலை,
2026, பெப்புருவரி 05.

EOG 02 - 0099